**செ. கு. எண்**:321 **நாள்**:04.09.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 4.9.2012

பெரம்பலூர் மாவட்டம், எளம்பலூர் கிராமம், திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் 3.9.2012 அன்று திருத்தணியிலிருந்து திருச்சி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து நிலைதடுமாறி சாலையோர மரத்தில் மோதியதில், பேருந்தில் பயணம் செய்த திரு.மணி என்பவரின் மகன் பிரபு சம்பவ இடத்திலேயும், திரு. ஞானசேகர் என்பவரின் மனைவி ஆதிலெட்சுமி பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

சாலை விபத்தில் அகால மரணமடைந்த பிரபு மற்றும் ஆதிலெட்சுமி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த சாலை விபத்தில் பேருந்தில் பயணம் செய்த **26** நபர்கள் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், பெரம்பலூர் மற்றும் திருச்சி மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவத்தில் காலமான பிரபு மற்றும் ஆதிலெட்சுமி ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**